உ
ஓம் சக்தி துணை


# துர்க்கா மஞ்சரி

"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"
அபிராமி பட்டர்

சித்திரபானு வருடம் சித்திரை 1ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2033 (13-04-2002)

வெளியீட்டாளர்

அருள்மிகு
துர்க்காதேவி
இந்து
தேவஸ்தானம்



மலர்: 3
இதழ்: 1

7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2. TEL: (604) 521-3472

# ஆலயமும் நாமும்

துர்க்கா மஞ்சரியின் இன்னுமொரு இதழ் முலம் தங்களை சந்திப்பதில் பெருமை கொள்கிறோம். ஆலயத்தின் செயற்பாடுகளையும் எதிர்கால செயற் திட்டங்களையும், அடியவர்களின் ஆத்மீக ஆக்கங்களையும் தாங்கிவரும் இம்மலர் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அன்பர்களிடம் வந்து சேர்கிறது. எமது சென்ற தைமாத இதழ் தவிர்க்க முடியாத காரணங்களினால் வெளிவரவில்லை. எமது மஞ்சரிக்கு ஆக்கங்களை தந்துதவிய அன்பர்களுக்கும் கடந்த வருடம் வெளியான எமது சிறப்பிதழுக்கு பலவழிகளிலும் உதவிபுரிந்த அன்பர்கள் அடியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம.

உலகின் பல பாகங்களிலுமிருந்து புலம் பெயர்ந்து மொழியாலும் வழிபாட்டு முறையாலும் இந்த ஆலயத்தில் ஒன்று கூடும் நாம் எமது நோக்கம் காலாகாலமாக எமது மூதாதையர் கட்டிக் காத்துவந்த எமது இறை நம்பிக்கை, எமது கலை, கலாச்சாரம், இனத்தின் ஒருமைபாடு அழியாது தொடர்ந்தும் வளர்க்கப்பட வேண்டும் என்பதேயாகும். அந்த முறையில் நமது ஆலயத்தில் சமய, யோக, வகுப்புக்களை நடத்துவதோடு நூல் நிலையத்தையும் நடத்தி சமயத்தையும் மொழியையும் வளர்க்கும் வழிமுறைகளையும் பேணி வருகிருோம். எமது ஆலயத்தில் நேரம்தவறாத பூசை முறைகளும், அபிசேகங்களும், வருடாந்த திருவிழாக்களும் நடை பெறுகிறது.

ஆலயத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தை மாதம் 27ம் திகதி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. ஆலயயாப்பின் பிரகாரம் இந்த வருடத்திற்கான நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபையினர் இந்த ஆண்டு ஆலயத்தை நிர்வகிப்பது மாத்திரமன்றி எதிர்கால நடவடிக்கைகளையும் இவர்கள் செவ்வனே செய்ய எல்லாம் வல்ல அம்பிகையை பிராத்திபோமாக.

புலம் பெயர்ந்து பிரிடிஸ்கொலம்பியாவில் வாழும் தமிழ் மக்களுக்கென இருக்கும் ஒரே ஆலயம் இந்த ஆலயம். இதை நாம் வருடா வருடம் பராமரிப்பது மாத்திரமல்லாமல் நாம் ஆலயத்தை வாங்கும் போது அடியார்களிடம் வட்டியில்லாமல் வாங்கிய கடன் திருப்பி கொடுக்க வேண்டிய கட்டாயத்திலும் கடப்பாட்டிலும் உள்ளோம். ஆலயத்தில் அபிசேக பூசைகள் மூலம் கிடைக்கும் நிதி எமது வங்கிக் கடன் கட்டவும் ஆலயத்தை பராமரிக்கவும் போதுமானாதாக உள்ளது. அன்பர்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடை மூலம்தான் நாம் இந்த வட்டியில்லாக் கடனை அடைக்க முடியும்.

## ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதியநேரப்பூசை பகல் 12.00மணிக்கு நடைபெறும்.

தினம் தோறும் இரவு நேரப்பூசை இரவு 7.30மணிக்கு நடைபெறும்.

செவ்வாய்கிழமை தோறும் ராகுகாலப்பூசை பகல் 2.00மணிக்கு நடைபெறும்.

அடுத்த மூன்று மாதங்களுக்கு ஆலயத்தில் நடைபெறவிருக்கும் பூசை விபரங்கள்

| | | |
|---|---|---|
| 13.4.2002 | சனிக்கிழமை | தமிழ் வருஷப்பிறப்பு. |
| 15.4.2002 | திங்கட்கிழமை | கார்த்திகை விரதம். |
| 16.4.2002 | செவ்வாய்க்கிழமை | சதுர்த்தி விரதம். |
| 18.4.2002 | வியாழக்கிழமை | ஷஷ்டி விரதம். |
| 23.4.2002 | செவ்வாய்க்கிழமை | சர்வ ஏகாதசி விரதம். |
| 24.4.2002 | புதன்கிழமை | பிரதோஷ விரதம். |
| 26.4.2002 | வெள்ளிக்கிழமை | சித்திரா பௌர்ணமி விரதம். |
| 29.4.2002 | திங்கட்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம். |
| 3.5.2002 | வெள்ளிக்கிழமை | சிரவணவிரதம். |
| 6.5.2002 | திங்கட்கிழமை | திருநாவுக்கரசர் குருபூசை. |
| 7.5.2002 | செவ்வாய்க்கிழமை | சர்வ ஏகாதசி விரதம். |
| 9.5.2002 | வியாழக்கிழமை | பிரதோஷ விரதம். |
| 11.5.2002 | சனிக்கிழமை | அமாவாசை விரதம். |
| 12.5.2002 | ஞாயிற்றுக்கிழமை | கார்த்திகை விரதம். |
| 15.5.2002 | புதன்கிழமை | சதுர்த்தி விரதம். |
| 17.5.2002 | வெள்ளிக்கிழமை | ஷஷ்டி விரதம். |

| | | |
|---|---|---|
| 22.5.2002 | புதன்கிழமை | சர்வ ஏகாதசி விரதம். |
| 23.5.2002 | வியாக்கிழமை | பிரதோஷ விரதம். |
| 25.5.2002 | சனிக்கிழமை | பௌர்ணமி விரதம்.(வைகாசி விசாகம்) |
| 28.5.2002 | செவ்வாய்கிழமை | திருஞானசம்பந்தர் குருபூசை. |
| 29.5.2002 | புதன்கிழமை | சங்கடஹரசதுர்த்தி விரதம். |
| 31.5.2002 | வெள்ளிக்கிழமை | சிரவண விரதம் |
| 6.6.2002 | வியாழக்கிழமை | சர்வ ஏகாதசி விரதம் |
| 7.6.2002 | வெள்ளிக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 8.6.2002 | சனிக்கிழமை | கார்த்திகை விரதம் |
| 10.6.2002 | திங்கட்கிழமை | அமாவாசை விரதம் |
| 14.6.2002 | வெள்ளிக்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 15.6.2002 | சனிக்கிழமை | ஷஷ்டி விரதம் |
| 20.6.2002 | வியாழக்கிழமை | சர்வ ஏகாதசி விரதம் |
| 22.6.2002 | சனிக்கிழமை | சனிப் பிரதோஷ விரதம் |
| 24.6.2002 | திங்கட்கிழமை | பௌர்ணமி விரதம் |
| 27.6.2002 | வியாழக்கிழமை | சங்கட சதுர்த்தி விரதம் |
| 6.7.2002 | சனிக்கிழமை | கார்த்திகை விரதம் சர்வ ஏகாதசி விரதம் |
| 7.7.2002 | ஞாயிற்றுக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 9.7.2002 | செவ்வாய்க்கிழமை | சர்வ அமாவாசை விரதம் |
| 13.7.2002 | சனிக்கிழமை | சதுர்த்திவிரதம் மாணிக்கவாசகர் குருபூசை |
| 15.7.2002 | திங்கட்கிழமை | ஆனி உத்தரம் |
| 16.7.2002 | செவ்வாய்க்கிழமை | ஆடிப்பிறப்பு (ஆடி 1ஆம் செவ்வாய) |
| 20.7.2002 | சனிக்கிழமை | சர்வ ஸயன ஏகாதசி விரதம் |
| 21.7.2002 | ஞாயிறுக்கிழமை | பிரதோஷ விரதம் |
| 23.72002 | செவ்வாய்க்கிழமை | பௌர்ணமி விரதம் (ஆடி 2ஆம் செவ்வாய்) |

| | | |
|---|---|---|
| 27.7.2002 | சனிக்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 30.7.2002 | செவ்வாய்க்கிழமை | ஆடி 3ஆம் செவ்வாய் |
| 2.8.2002 | வெள்ளிக்கிழமை | ஆடிக் கார்த்திகை விரதம் |
| 4.8.2002 | ஞாயிற்றுக்கிழமை | சர்வ ஏகாதசி விரதம் |
| 5.8.2002 | திங்கட்கிழமை | சோமப் பிரதோஷ விரதம் |
| 6.8.2002 | செவ்வாய்க்கிழமை | ஆடி 4ஆம் செவ்வாய் |
| 8.8.2002 | வியாழக்கிழமை | ஆடி அமாவாசை விரதம் |
| 10.8.2002 | சனிக்கிழமை | திருவாடிப்பூரம் |
| 11.8.2002 | ஞாயிற்றுக்கிழமை | நாக சதுர்த்தி விரதம் |
| 13.8.2002 | செவ்வாய்க்கிழமை | ஷஷ்டி விரதம் ஆடி கடைசி செவ்வாய் |
| 14.8.2002 | புதன்கிழமை | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை |

## தமிழ்த்தாய் மண்ணே வணக்கம்

நம் தாய்த் தமிழ் மொழியின் பெருமையையும் தமிழ் மண்ணின் தொன்மையையும், அங்குள்ள காலச்சார, நாகரிக மற்றும் பல விபரங்களை இங்கு வாழும் இளம் சந்ததினருக்கு எடுத்துக் கூறும் வகையில் இத்தொடர் அமையும் அதற்கு முன் சில முக்கிய யதார்த்தங்களை நோக்குவோம்.

நாம் தமிழர்கள், எமது தமிழ் மொழிக்கு அன்பு, தூய்மை, இனிமை, இளமை எனப்பொருள்கொள்ளலாம். மொழிகள் எல்லாவற்றிற்கும் மூலமும் முதலுமாக விளங்குவது தமிழே. பண்டைக்காலத்தில் தமிழர்கள் உலகையாண்டு, தமிழ் மொழியும் நாகரீகமும் சமயமும் உலகில் பல நாடுகளிற் பரவியிருந்தன. ஆனால் காலக்கிரமத்தில் எல்லாவற்றையும் பறிகொடுத்து அடிமைப்பட்டு அல்லற்பட்டு வாழும் நிலை ஏற்பட்டது.

உலகம் முழுவதும் வியாபித்திருந்த எமது நாகரிகம், பசுபிக் கிழக்கிந்திய, தீவுகள் அமெரிக்கா, மத்திய ரேகைப் பிரதேசங்கள் எங்கும் காணப்பட்டன. இதிலே இலெமோரியா போன்ற சில நாடுகள் கடற்கோள்களினால் அழிந்து விட்டன. வடபுல நாட்டாரினால் நமது நாகரிகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

மனித இனம் முதலில் தோன்றிய இடமாக இலமோரியாவையும், அவர்கள் பேசிய மொழி திராவிடம் அல்லது தமிழ் என்றும், அங்கிருந்து பல நாடுகளிற் குடியேறி, அந்தந்த

மண்ணிற்கு ஏற்றபடி நிறம், நாகரிகம், உடை, மொழி, போன்றவை மாற்றப்பட்டன என்றும் ஆராய்சியாளார் கூறுகின்றனர்.

பண்டைக் கால எகிப்திய மக்களும், திராவிடரும் ஓரின மக்களென்றும் இம்மக்கள் ஸ்பெயின் போன்ற பல நாடுகளிற் குடியேறினர் என்றும் அறியப்படுகிறது. புதிய கால நாகரிகமும் இவர்களுடையதே. உலகில் உள்ள சகல மக்களும் அடிப்படையில் இவ்வினத்தினரே என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்கிறனர். இந்தியாவிலிருந்து திராவிடர் குடிபெயர்ந்து மெசப்பெற்றோமியா, பிரித்தானிய தீவுகள் போன்ற பல நாடுகளிற் குடியேறினர். வடதுருவத்தில் வாழும் எஸ்கிமோ மக்களும் திராவிட இனத்தைச் சேர்தவர்களென்றும் பல அறிஞர்கள் கூறுகின்றனர்.

புராதன தமிழகமாகிய குமரிநாடு இந்து சமுத்திரத்துக்குள்ளே ஆழ்ந்து போனபடியால், புதைப்பொருள் ஆராய்சிக்கு வாய்பதில்லை. ஆனாலும் இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகளையும் எமது இலக்கியங்கள், புராணங்களை வைத்தும் எமது பழைய வரலாற்றை அறிந்து கொள்லளாம். ஆகவேதமிழினத்தின் தோற்றத்தையும் தொன்மையையும் எவரும் மறுக்கவும் மறைக்கவும் முடியாது.

தொடரும்.............................

அன்புடன் க.குமாரசாமி

## யாருக்கு எப்படி எப்போ ஆகும் யோகம்

'தவமும் தவமுடையார்க்கு ஆகும்'
'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி''
'முதலிலார்க்கு ஊதியம் இல்லை'
'வினையால் வினையாக்கிக் கோடல்'

யோகம் உடையவரே யோகம் பயில முடியும். அப்படியாயின் முதலில் எப்படித் தொடங்குவது? கோழியா முட்டையா முதலிற் தோன்றியது? பேட்டுக் குஞ்சால் நிச்சயம் கோழியாகி முட்டையும் போடமுடியும். அதேபோன்றதே மானிடக் குழவியும். மனிதப்பிறவி எடுத்தோரால் நிச்சயம் யோகம் பயிலமுடியும். மோட்சமும் சமாதியும் எய்தவும் முடியும்.

அது எப்படி? மனிதப் பிறப்பு புதுமையானதும் புனிதமானதுமாகும். இவ்விரண்டு குணங்களும் இறைகுணங்களின் சாயல்.. அதனால் இறை அருள்பட்ட, அவன் நிழல் பட்ட, சீவன்கள் மட்டுமே மானிடராய்ப் பிறக்க முடியும். இங்ஙனம் அவன் அருள் நம் எல்லோருக்கும் உண்டு என்பது நிரூபணமானதால், அவன்தாள் வணங்க வேண்டியது தான் பாக்கி.. இதற்கு ஏன் தயக்கம்?

பூச்சி புழுக்கள் பறவைகள் மிருகங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் என்பவன் மன்னுதல் (சிந்தித்தலும்) உணர்வும் உடையவனாவான். ஆன்மா இத்தன்மைகள் இரண்டாலும் உடலை இயக்குகிறது. இப்புதுமைப் பொருளாம் உடலை-, ஆன்மா குடிகொண்டிருக்கும் ஆலயத்தை, மேலும் புனிதப்படுத்துவதற்கு (சுகம் தரும் சுத்தம்

செய்வதற்கு) கருவி, காலம், வினை, இடம் வேண்டும் - நமது பொய்யா மொழி ஆசான் கூறுவது போல்..

கருவிகள் . சித்தமும் பிரக்ஞையும் (விழிப்புணர்வு) சித்தத்தின் ஒரு சிறு பகுதியே புலன்களாகும்.

காலம்: பிறப்பிலிருந்து இறப்பு வரை வரையறுக்கப்பட்ட நாட்கள்.

வினை: ஆண்டவனை முன்வைத்துத் தன்குருவையோ தன் அருளையோ தொடர்ந்து செய்தல்.

இடம்: பூவுலகம், ஊரில் உள்ள ஆற்றங்கரை, ஆலயமண்டபம், சாலை மரநிழல், தான் வசிக்கும் வீடு, தான்இருக்கும் ஆசனம்.

சுருங்கச் சொல்லின் யோக உபாயத்தால் கிடைத்த இம் மானிடப்பிறப்பில் மேன் மேலும் யோகம் பயின்று இம்மைப்பலனும் மறுமைப்பயனும் பெற்று ஆத்மீக முன்னேற்றம் அடைவோமாக.

வி.தி

## அறிவுக்கு விருந்து

நேரத்தை மிச்சப் படுத்த முடிகிறதா அப்படியானால் உங்களால் எல்லாவற்றையும் மிச்சப்படுத்த முடியும். நன்றாக உழைக்க முடியும். முன்னேற முடியும்.
(பெஞ்சமின் டிஸ்ரேலி )

தன்மனச்சாட்சி காட்டும் சிந்தனைகளை மீறிச் செயல்படும் அரசியல் தலைவன் இந்தச் சமூகத்திற்குப் பயனற்றவன்
(காந்திஜி)

நல்ல மனிதன் பிறருக்கு எந்த வகையிலும் தீமை செய்யலாம் என்பதைப் பற்றிச் சிந்திக்க மாட்டான். அதுவே மனிதத்தன்மை.
(பிரான்சில் பேக்கன்)

மிகப்பெரிய பிரச்சனை வந்து விட்டாத?. அப்படியானால் உங்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய அற்புதம் நிகழப்போகிறது என்று பொருள்.எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருங்கள்.ஏதோ ஓர் அற்புதம் நிகழப்போகிறது எனபதை நீங்கள் மனப்பூர்வமாக நம்புங்கள். அந்த அசைக்க முடியாத உறுதி உங்கள் பிரச்சனைகளுக்கு அற்புதத் தீர்வையும் கொண்டு வந்து தரும்.
(செச்- சூல்லர்)

விதி என்பது என்ன? நாம் விதைப்பதை நாம் அறுவடை செய்கிறோம். நம் விதியைப் படைப்பவர்கள் நாமே. பழியோ, பாராட்டோ வேறு எவரையும் சராது.(சுவாமி விவேகானந்தர்)

தொகுத்தவர் : இணுவைக் குமரன்

# தேறும்படி சில ஏது

உயிர்கள் பிறப்பதும் இறப்பதும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்ற ஒரு சுழற்சி. இந்த சுழற்சியை கறங்கு என்று மணிவாசகர் ஒரு இடத்தில் பாடியிருக்கிறார். கறங்கு என்றால் காற்றாடி. காற்றாடி சுத்துவது போல் பிறப்பும் இறப்பும் சுற்றி சுற்றி வருகிறது கறங்கு போல் வில்பிடித்த கால்பிடித்த காலதூதர் கையிலே உறங்குவாய் உறங்குவாய் இனிக்கிடந்து உறங்குவாய் என்பது கம்பர் பெருமானின் வாக்கு. காற்றாடி சுற்றுவதற்கு காற்று அவசியம். காற்று இல்லாவிட்டால் காற்றாடி சுற்றாது. அதே போல உயிர்களிடத்தே ஏற்படும் சிற்றுணர்வு இல்லாமல் போக ஆன்மா சிவம் ஆகிறது.

சிவமான வாபாடித் தென்றேனம் கொட்டிமேர் என்பது திருவாசகம். இந்த உடம்பு பவ வினையே சனித்தது என்பார் அருணகிரிப்பெருமான். அருணகிரியார் சிற்றின்பத்திலே திழைத்தவர். ஆதலால் அவருக்கு அவரின் உயிரின் தன்மை புலனாகும். ஆகையினாலே அவர் அப்படித்தான் பாடினார்.

ஞானம் பெற்ற பின்னும் ஆத்மா சுத்தமானதா என்ற வினா ஞானிகளிடத்தே தோன்றியிருக்கிறது. ஆதலால்தான் ஞானம் பிறந்த பின்பும் பட்டினத்தார் புலம்பியிருக்கிறார். காரணம் உயிர் வினையின் பிரகாரம் வந்தது. பொல்லா வினையேன் என்றார் மாணிக்கவாசகர். பாருங்கள் எவ்வளவு உயிர் அசுத்தம் அடைந்திருக்கிறது என்று. உணர்வு கலங்கியதாலே இந்த உயிர் சனித்தது. தண்ணீர் கலங்கினால் அதில் சந்திரனுடைய பிம்பம் விழுந்தாலும் தெரியாதா?. அதேபோல் உணர்வு கலங்குகின்ற போது இறைவன் வெளிப்படின் உணர்வு கலங்கிஒழுகிய விந்து என்றார் பட்டினத்தார்.அதனாலே உருவாகிய உடம்பு உயிர். இவைகள் எப்பொழுதும் கலங்கிய வண்ணமே இருக்கும். இந்த கலக்கம் தெளிகின்ற போது இறைவன் தோன்றுவான்.

இறைவனை நினையாமல் வாழும் உயிர்க்குப் பெயர் 'வருந்தும் உயிர்' என்பதாகும். உடலுக்குத்தான் வருத்தம் இருக்கிறது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உயிருக்கும் வருந்துகின்ற தன்மை இருக்கிறது. நாங்கள் வாழ்கின்ற வாழ்க்கையானது பொய் என்று எவன் ஒருவன் நினைக்கிறானோ அவன் மனிதவாழ்க்கை வாழ முயல்கின்றான் என்பது கருத்து.

வாழ்கையிலே கிடந்து சந்தோசக்கடலில் மூழ்கித்திழைத்த சுந்தரர்;
வாழ்வாவது மாயம் இது மண்ணாவது" திண்ணம் என்று பாடினார்.
ஒருபிடி நீறு இல்லா உடம்பை நம்பும்' என்னை ஆதரி என்றார் பட்டினத்து செட்டி.

இதைத்தான் ஒருபிடிசாம்பல் என்று சாதாரணமாக சொல்வார்கள் அறிஞர்கள். சிலர் வாழ்கின்ற போது கர்வத்தோடு அகங்காரமாக வாழ்வார்கள். அவர்கள் இறைவனை நினையாமல் வாழ்பவர்கள் என்பது கருத்து.

"வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல் தானே புதுமை-திருந்திழாய்
சீதநீர் பொள்ளல் சிறு குடத்து நில்லாது
வீதலோ? நிற்றல் வியப்பு"

என்று பாடினார் சிவப்பிரகாச சுவாமிகள். நாங்கள் வாழ்வதுதானாம் புதுமை. ஓட்டைப்பானைக்குள் தண்ணி நிற்பதா? வெளியே ஓடுவதா புதுமை. ஒன்பது ஓட்டையுள்ள உடம்பிலே காற்று நிற்பதா வெளியே செல்வதா புதுமை. இப்படி சிவப்பிரகாச சுவாமிகள் கேட்கிறார். சாகாமல் நாம் இருப்பது தான் புதுமை. சாவது ஒன்றும் புதுமையல்ல.

இவ்வளவு ஏன் அடியேன் சொன்னேன் என்றால் நாங்கள் எல்லாம் எங்கள் உயிரை பரிணாமவளர்ச்சியில் ஈடுபடுத்தவேண்டும் என்பதற்காய் சொன்னேன். உயிர் பரிணாமம்அடைய கூர்ப்பு எய்த முதற்படி நாம் திருக்கோயில் வழிபாடு செய்தல் ஆகும். இப்படி நாம் திருக்கோவில் வழிபாட்டில் ஈடுபட சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நாற்பதமும் இயல்பாகவே ஏற்பட்டு இறைவள் பாதம் இடைய வழிஏற்படும்.இதைத்தான் "தேறும்படி சில ஏதுவும் காட்டி" என்றார் அபிராமிப்பட்டர்.

இப்படி வழிவரும் ஆன்மா இறக்கும் போது அத்துவித நிலையை எய்தும். இதனை "அப்பினிடை உப்பு" என்று சைவ சித்தாந்தம் பேசும். அப்பு என்றால் தண்ணீர். உப்பு என்றால் உப்புத்தான். ஒருபடி தண்ணியையும் ஒருபடி உப்பையும் கலந்தால் எப்படி ஒருபடி தண்ணியாக காட்சி தருமோ இப்படி சிவனிடத்தே சீவன் ஒன்றுகின்ற போது இரண்டற்ற தன்மை காணப்படும்.

இதுதான் பரிணாமத்தின் உச்சம். இதனை மணிவாசகர் சித்தம் சிவமாகிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்...........என்று பரவியுள்ளார். சிவமாக்குதல்

என்பதுதான் அத்வைதநிலையாகும். இந்த நிலையை அடைவதற்கு மனம் என்னும் அந்தக்கரணம் சுத்திகரிக்கப்பட வேண்டும்.
சினமிறக்க கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும் மனம் இறக்க கல்லார்க்கு வாயேன் பராபரமே! என்கிறார் தவஞான சிங்கவள்ளல் தாயுமான சுவாமிகள். மனத்தானாம் மாந்தர்கு உணர்ச்சி என்றார் வள்ளுவர்.அறிவுவளர்ச்சி என்பது புறநிலையிலே பல இப்பொழுது இயற்பியல் வேதியல் கணிதவியல் தர்க்கவியல் இவற்றுள் அறிவு வளர்ச்சியடைந்து பின் ஒரு நிலையில் முற்றுப்பெறுகிறது. வெற்றியடைகிறது. ஆனால் அறிவு கூடிய மனிதர்கள் எல்லாம் மனிதர்களாக வாழ்வதில்லை. மனவெளி மாந்தர் ஆக இருப்பதில்லை. இந்த உலகம் போகிற போக்கில் நாம் காணும் பெரிய உண்மை இதுதானே! ஆனால் உணர்வு என்பது மனத்தினை மட்டும் தளமாக வைத்தே வளர்ச்சி அடைகின்றது. மனம் ஒழுங்காக இருந்தால் மனிதர்கள் ஒழுங்காக இருப்பார்கள். நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் என்பது திருமுறைச்சாரம். மனம் ஒழுங்காக இருந்தால் மனிதர்கள் தெய்வீகமாக வாழ்கிறார்கள் என்பது கருத்து.

துணிவெளுக்க மண்ணுண்டு
தோல்வெளுக்க சாம்பலுண்டு
மணிவெளுக்க சாணையுண்டு (ஆனால்)
மனம்வெளுக்க வழியில்லை- எங்கள் முத்து
மாரிஅம்மா எங்கள் முத்துமாரியம்மா

என்று ஏங்குகிறார் பாரதியார். மனம் வெளுப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும். இதற்கு சுந்தரர் தேவாரம் நல்ல பதிலாக வருகிறது. நீள நினைந்து அடியேன் நித்தலும் கை தொழுவேன். என்ன அழகாக மனம் வெழுப்பதற்கு பாதையை காட்டியுள்ளார். நீள நினைத்தல் என்றால் தொடர்ந்து இடைவிடாது இறைவனை நினைத்தல் என்று பொருள்படும். இதனை தியானம் என்றும் அழைப்பர். அரைநிமிடம் ஒருவருக்கு தியானம் ஏற்பட்டாலே அதுவே நீள நினைத்தல் ஆகும்.

அருணகிரிப் பெருமான் தியானம் எல்லோருக்கும் ஏற்படவேண்டும். ஆதலால் எல்லோரும் தியானம் செய்யவேண்டும் என்று விரும்பியவர் அதனால்தான் அவர்

"சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தலமுறைதி யானம் வைக்க அறியாத"

என்றார்.

அறியாதது என்றால் சொல்லிக்கொடுத்தும் உணராதது என்பது பொருள். மனம் ஒழுங்காக இருந்தால் தான் உணர்வு வரும். இதனால்தான் அவர் "சகடகட

மூடமட்டி" என்றால் படுமுட்டாள் என்பது கருத்து. இறைவனை நினைக்காதவன் படுமுட்டாள்.மட்டி" என்று அருணகிரியார் வெறுமனே சொல்லாமல் மூட என்று அடைகொடுத்திருப்பது சிந்தனைக்கு உரிய ஒன்று. மூடமட்டியாக நாம் இருப்பதற்கு காரணம் பவவினையிலே சனித்த உடல் என்று பதிலாக திருப்புகழில் அவரே பாடியிருக்கிறார்.

ஆதலால் வினையை அறுப்பதற்கு எல்லாப்பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்று மணிவாசகரின் பக்குவத்தை நாம் அரிதில் முயன்று பெறவேண்டும்.

--வடிவேலு ஞானகாந்தன்.----

# குரு பக்தி

## திருமுருக கிருபானந்தவாரியார்

பக்தி மூன்று வகைப்படும். ஈஸ்வரனுக்கு நேராகச் செய்யும் பக்தி ஈஸ்வரபக்தி: அடியார்களுக்கு செய்யும் பக்தி அடியார் பக்தி, ஆச்சரியரிடம் செய்யும் பக்தி குருபக்தி. சுருக்மாகச் சொன்னால், 1. சிவபக்தி 2. ஜங்கம பக்தி 3. குருபக்தி என்று சொல்வார்கள்.

இந்த மூன்றிலே மிகவும் சிறந்தது குருபக்தி என்ன காரணம் ? என்று சொல்லப் போகிறேன்.

ஆண்டவன் கருணை யாண்டும் நீக்கமற நிறைந்து இருக்கிறது. இந்த இடத்தில்தான் இறைவன் கருணை இருக்கிறது, இவ்விடத்தில் இறைவனுடைய கருணையில்லை என்று முடியாதபடி, எங்கும் பரந்தும் விரிந்தும் இருக்கிறது.

அந்தக் கருணையைப் பெறவேண்டுமால் ஆச்சாரியர் மூலமாகத்தான் சுலபமாகப் பெறமுடியும். ஒரு சிறிய உதாரணம் சொல்கிறேன்.

120 டிகிரி சுடும் வெயில் அங்கு இந்த வேஸ்டியை வைத்தால் சுடுமே தவிர எரிந்து போகாது. சூரிய காந்தக் கண்ணாடி என்ற ஒன்று உண்டு. அந்த சூரிய காந்த கண்ணாடியை வெயிலில் வைத்து, அதன் கீழ்வருகிற மற்றொரு வெயிலில் வேஷ்டியை வைத்தால் தீ திக்கென்று பத்திக் கொள்ளும். இந்த வெயிலுக்கு வேஷ்டியை கொளுத்துகிற ஆற்றல் கிடையாது. ஆனால் சூரியகாந்தக் கண்ணாடிக்கு கீழ்வரும் வெயில் வேஷ்டியை தகனம் பண்ணிவிடுகிறது. என்ன காரணம் ? ஐம்பதாயிரம் கிரணங்களை தன்பால் ஈர்த்து அனுப்புகிறது சூரிய காந்தக் கண்ணாடி..

நோரக வரும் வெயில் மாதிரி இறைவனைக் குறித்துச் செய்யும் பக்தி..சூரிய காந்தக் கண்ணாடியின் கீழ்வரும் வெயில் மாதிரி குரு பக்தி..

குரு நாதர் பல வருடங்கள் தவம் செய்து இந்தத் திருவருளைச் சேர்த்து வைத்திருக்கிறார். அதனைச் தன் சீடனுக்கு பாய்சிச்விடுகிறார். ஆகையால்தான் சிவ பக்தியைக் காட்டிலும் குருபக்கியே சிறந்தது என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள்.

அருணகிரிநாதர் மிகவும் பெரியவர் அவர் ஐம்பத்தொரு அனுபூதி பாடல்களைப் பாடினார் மந்திர சாத்திரமாக ஐம்பத்தொரு அஷரங்களையும் ஐம்பத்தொரு அனுபூதிகளையும் பாடினார். அதில் கடைசிப் பாட்டு உங்களுக்கு தெரியும்.

“ குருவாய் வருவாய் அருள்வாய் குகனே ! என்று சொல்லுகிறார். ஆண்டவனைக் குரவாக வந்து அருள்செய் என்று செல்லுகிறார்.

மாணிக்க வாசகருக்கு எம்பெருமான் குருநாதராக வந்தார் குருந்த மரநிழலில் திருப்பெருந்துறையில்.. ஆகவே இறைவன் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்குக் குருநாதனாக வருவார்.

மற்றொன்று ஆச்சாரியனும் நம்மைப் போலத்தான் உண்டு, உடுத்து இருப்பார். இவரை நம்மைப் போல நினைக்கக் கூடாது. எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிலே தோன்றிய எல்லாப்பிராணிகளும் உண்டு வெளியே வந்தால் மலம் என்று பெயர். ஒரு பிராணி மட்டும் உண்டு கழித்து மலம் என்று பெயரில்லை. அது புனிதமானது எது ? அது பசுவின் சாணம், பூசை வீட்டிலே அதைக் கொண்டு மொழுகுகிறோம். சுவாமிக்கும்

பஞ்சகவ்வியமாக அபிஷேகம் பண்ணுகிறோம். இதோ இந்தத் திருநீறு பசுவின் மலத்தால் அதனால் குருகுலத்திலே ஒரு வேளை தான் சாப்பாடு ஆனால் பிள்ளைகள் எல்லாம் அழகாகப் படிக்கிறார்கள்.

காலை 9 மணிக்கு பாடம் நடந்தது. ஆயோததௌமியர் அந்த இராஜகுமாரனைக் கூப்பிட்டார் " ஆருணி ! நமக்குச் சொந்தமான வயலிலே மடை உடைபட்டு வெள்ளமாகத் தண்ணீர் ஓடுகிறது, அந்த மடையை அடைத்து விட்டுவா" என்றார், இராஜகுமாரனுக்கு வயலிலே வேலை வைத்தார். நமது பிள்ளைகள் என்ன செய்யும்? "அந்தக் கோனார் பையனை அனுப்புங்கள். எனக்குப் பழக்கமில்லை" என்று சொல்லி எதிர் நீச்சல் போடுவார்கள்.

அவன் 'குரு வார்த்தைக்கு மறுவார்த்தை இல்லை' என்று, மண்ணை வெட்டி வெட்டிப் போட்டான். மடை அடைபடவில்லை. மடை உடைந்து கொண்டே இருக்கிறது.. காலை முதல் மாலை வரை வேலை செய்தான். மடை அடைபடவே இல்லை. "குருநாதன் சொன்ன வேலையை இட்ட கட்டளையை நிறைவேற்றாமல் நான் திரும்பிப் போகலாமா? இந்த சரீரம் வேண்டுமா? என்று குறுக்கே படுத்து விட்டான். அங்கு வருகின்ற தண்ணீர் அவனைத் தாண்டுவதற்கு அஞ்சி, அப்படியேடேம் மாதிரி தேங்கி நின்றது.

இரவு 8 மணிக்குப் பாடம் சொல்லித் தருகின்ற பொழுது முதலிலே உட்காருகின்ற பையனைக் காணோம். ஆருணி எங்கே? என்றார் "காலையிலே போனவன் இன்னும் காணோம்" என்றனர் மற்ற மாணாக்கர்கள். அந்தக் காலத்தில் டார்ச் லைட் கிடையாது! தீவட்டி எடுத்துக் கொண்டு போறார். அந்த வயலுக்குப் போய்.. "ஆருணி! என்றார் சுவாமி ! அடியேன் தண்ணீருக்குள் இருக்கிறேன்" என்றான் ஏனப்பா என்றார் கலையிலிருந்து மாலை வரை மடை அடைத்தேன். மடை அடைப்படவில்லை. மடையில் படுத்துவிட்டேன். சுவாமி! என்றார் உன்னையே தியாகம் செய்து விட்டாய். எழுந்துவா என்றார். அப்படியே கங்கையை பிளந்து கொண்டு வந்து விட்டான். அவன் தலையிலே கையை வைத்து "எல்லா ஞானமும் வந்துவிட்டது போய் விட்டு வா" என்றார் ஒரு விநாடியிலே ஞானம் கொடுத்தார். ஆச்சாரியன் கண்ணாலே பார்த்தால் ஞானம் வந்துவிடும் அப்படிப்பட்டவர்கள் தான் ஆச்சாரியர்கள்.

அடுத்த மாணவன் உபமன்யு. "உபமன்யு! இங்கே வா" என்றார் இங்கே உனக்கு சாப்பாடு போடுவதில்லை . ஆனால் உடம்பு நன்றாக இருக்கிறதே என்றார் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" நான் போய் கிராமத்தில் பிச்சை எடுத்துச் சாப்பிடுகின்றேன்.

தொடரும்--------------------------